## தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 அபிப்பிராயம்

--------------------

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பறிக்கை 2021 மே 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் கீழ் அறவிடப்பட்ட கடன் வட்டியான ரூபா 417,801 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் உள்ள வட்டி முதலீட்டு செயல் நடவடிக்கைகளின் | காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுவனவுகள் சரியாக |

| | | |
|---|---|---|
| ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு செயல் நடவடிக்கைகளில் உருவான வருமானங்கள் அல்லாத பெறுவனவுகளின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், முதலீட்டு செயல் நடவடிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | கீழ் பெறுவனவொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழங்கப்படுகின்ற கடன் மற்றும் முற்பணங்களை அறவிடுதலும் உள்ளடக்கப்பட வேண்டியது, முதலீட்டு நடவடிக்கைகளின் உருவான நிதிப் பாய்ச்சல் ஒன்றாகவேயாகும். அவ்வாறான வட்டி முதலீட்டு செயல் நடவடிக்கையாக குறிப்பிடுதல் சரியானதென நம்புகின்றேன். | வகைப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்துள்ள நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றான ACA-6 இன் பெறுமதி திறைசேரி திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையின் (SA 82) இறுதி மீதியுடன் ஒப்பிடும்போது உருப்படி ஒன்று ரூபா 564,562 கூடுதலாகவும், 3 உருப்படிகளின் மொத்தம் ரூபா 564,560 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியிலும் எங்களுடைய கணக்குகளிலும் மீதிகள் சமமாக உள்ளது. 2020.12.31 ஆந் திகதியில் உரிய 2021.01.25 இல் வெளியிடப்பட்ட திறைசேரியின் சொத்துக்கள் அறிக்கையின் மீதி தேசிய பொலிஸ் ஆணைக்குழு சொத்துக்களின் மீதி சரியாக காணப்பட்டிருந்தது. அவை சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2021.02.16 திகதிய திறைசேரியின் SA | நிதிக் கூற்றுக்கள் சரியாக ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 82 அறிக்கையில் குறியீட்டு இலக்கம் 6112201 இல் ரூபா 564,561.67 அதிகரித்துள்ளதுடன், 6112202, 6112204, 6112205 ஆகிய குறியீட்டு இலக்கங்களுக்கு ரூபா 564,561.67 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான காரணத்தை இதுவரை எங்களுக்கு அறியத் தரவில்லை. மாற்றங்களை மேற்கொள்வதற்கான காரணத்தை இனங்காண முடியாதுள்ளதுடன் 2021.02.16 ஆந் திகதிய SA 82 அறிக்கை சரியானதல்ல. | |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து அதனைப் பேணிச் செல்லப்படுவது தொடர்பில் பிரதான கணக்கீட்டு | ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக தற்போதும் ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணப்பட்டு வருகின்றது. அனைத்து வேலைகளும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக மேற்கொள்ள தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இன்னொரு உத்தியோகத்தரினது மேற்பார்வையின் கீழ் வரும் வகையில் வேலைப் பகிர்வொன்று சான்றுறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அரச கணக்கீட்டிற்காக 03 கணனி கட்டமைப்புக்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உத்தியோகத்தர்களினால் செயற்படுத்தப்படுவதுடன் இரண்டு மேற்பார்வை உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை மேற்கொள்ளப்படுகின்றது. | ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வேலைகள் நிறைவேற்றப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரசியலமைப்பின் 20 ஆவது சீர்திருத்தத்தின் பிரகாரம் 47 அரசியலமைப்பின் 155 ஊ வின் கீழ் ஆணைக்குழுவினால் பொதுமக்கள் உறுப்பினரிடமிருந்து அல்லது ஏதாவது அதிருப்திக்கு உள்ளான ஒருவரிடமிருந்து பெறப்படுகின்ற முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காகவும் | முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கும் விசாரணையை மேற்கொள்வதற்குமான வேலை நடைமுறையை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பதுடன் அதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு | 20 ஆவது அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| விசாரணையை மேற்கொள்வதற்காகவும் வேலை நடைமுறையை தாபிப்பதற்கான விதிகளை பெற்றுக் கொள்ள முடியுமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் 2021 மார்ச்28 ஆந் திகதி வரை அந்த விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | உரித்தான சட்ட வரைபொன்றை இப்போது தயாரித்து அதை பிரதமர் அலுவலகத்திற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. |

## 2.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தை பெற்றிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்திருத்தல் பொய் குற்றச்சாட்டுக்களை மேற்கொள்ளல் மற்றும் இலஞ்ச ஊழல் தொடர்பான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்க்கும் சதவீதம் நூற்றிற்கு 60 க்கு குறைவான சதவீதத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் வருடத்திலே கொவிட் 19 சுகாதார சட்ட விதிகளுக்கு இணங்க கடமைகளில் ஈடுபடுவதற்கு நேர்ந்தமையால் முறைப்பாடுகளை தீர்க்கும் சதவீதம் நூற்றிற்கு 60 இலும் குறைவாக இருந்த போதும் 2021-02-28 ஆந் திகதியில் அதன் சாதாரண சதவீதம் நூற்றிற்கு 60ஐ விஞ்சியிருந்தது. விசாரணைக்குரிய பொலிஸ் அறிக்கை தாமதமாவதன் பொருட்டும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவது தாமதமாகியிருந்தது. | உத்தியோகத்தர் களினால் இடம்பெறுவம் தவறுகளை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொலிசினால் நடவடிக்கை எடுக்காமை, அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் மற்றும் பக்கச்சார்புடைமை தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுதல் கடந்த வருடத்தினை போன்றே மீளாய்வாண்டிலும் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை நூற்றிற்கு 80ஐ விஞ்சியிருந்தது. முன்னைய வருடத்திற்கு நிகராக பொருண்மையான அதிகரிப்பொன்று காணப்பட்டது. அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் தீர்க்கப்படுதல் சதவீதம் முன்னைய வருடத்திலே நூற்றிற்கு 77 ஆக காணப்பட்ட போதும் இந்த வருடத்திலே நூற்றிற்கு 68 வரை குறைவடைந்திருந்தது. அத்தோடு, பக்கச் சார்புடைமை தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுதல் முன்னைய வருடத்திற்கு நிகராக நூற்றிற்கு 92 க்கு அதிகரித்திருந்தாலும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் நூற்றிற்கு83 இல் இருந்து 74 வரை குறைவடைந்திருந்தது. மேலும், பொலிஸ் அறிக்கை தாமதமானதன் பொருட்டும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவது தாமதமாகியிருந்தது. | மேலே இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தின் படி உங்களுடைய அவதானிப்புக்கள் சரியானதாக இருந்தாலும் 2021.02.28 ஆந் திகதியாகும் போது முறைப்பாடுகள் தீர்க்கப்படும் சதவீதம் சாதாரணமாக நூற்றிற்கு 80 வரை அதிகரித்திருந்தது. இந்த தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக விபரமான தகவல்களை முறைப்பாட்டாளர்களிட மிருந்தும் பெறப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் பெரும்பாலாக காணப்படுகின்றன. அவ்வாறான தகவல்கள் பெறப்படுதல் தாமதமாதல் காரணமாக அதற்குரிய விசாரணைக்காக ஒரு குறிப்பிட்ட அளவு காலமொன்று செலவாகின்றது. அதனால் அவ்வாறான விசாரணை நடவடிக்கைகளுக்காக தாமதமொன்று ஏற்படுகின்றது. | ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை மேற்கொள் வதற்கான முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொய் குற்றச்சாட்டுக்களை மேற்கொள்ளல் தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுதல் முன்னைய வருடத்திற்கு நிகராக நூற்றிற்கு 120 ஆல் அதிகரித்த போதிலும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் நூற்றிற்கு 78 இல் இருந்து நூற்றிற்கு 55 வரை குறைவடைந்திருந்தது. | கொவிட் தொற்று நிலைமைக்கு அனுகூலமாக சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் கடமைகள் நிறைவேற்றப் படுவதுடன் இதன் கீழ் பெறப்பட்டிருந்த முறைப்பாடுகளில் 148 இல் 99 க்கு 2021.02.28 ஆந் திகதியாகும் போது விசாரணைகளை முடிவுறுத்தியிருந்ததுடன் அது சாதாரணமாக நூற்றிற்கு 66 ஆகும். இந்த தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணைக்குட்படுத்தும் போது மிகவும் விசாலமான அளவில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நேர்ந்திருப்பதுடன், அதற்குரிய விசாரணைக்காக ஒரு குறிப்பிட்ட காலம் செலவாகின்றது. அதனால் அவ்வாறான விசாரணை நடவடிக்கைகளுக்கு தாமதமொன்று ஏற்படுகின்றது. மேலும், பொலிஸ் அறிக்கை தாமதமாவதன் பொருட்டும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவது தாமதமாகியிருந்தது. | ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை மேற்கொள் வதற்கான முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதான அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற 120 முறைப்பாடுகளை தீர்க்கும் சதவீதம் நூற்றிற்கு 47 என்ற | பிரதான அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது மிகவும் சிக்கலான மற்றும் உதவி பொலிஸ் | மேற்குறிப்பிடப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. முன்னைய வருடத்திலே 156 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்படும் சதவீதம் நூற்றிற்கு 67 ஆக காணப்பட்டது. | அதிகாரிகளிடமிருந்து மேல் மட்ட உத்தியோகத்தர்களின் முறைப்பாடுகளேயாகும். அதனால் அவற்றை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீண்ட காலம் செலவிடப்படுகின்றது. அத்தோடு கொவிட் 19 தொற்று நிலையின் கீழ் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நேர்ந்துள்ளதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. வினைத்திறனை அண்மிப்பதற்கு முடியாது போயிருந்தாலும் 2021.02.28 ஆந் திகதியாகும் போது பிரதான அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த 120 முறைப்பாடுகளில் 86 க்கு விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன் படி தீர்க்கப்படும் சதவீதம் நூற்றிற்கு 71 ஐ விஞ்சியிருந்தது. | |
| (உ) | மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெற்றிருந்த முறைப்பாடுகளை தீர்க்கும் சதவீதம் முன்னைய வருடத்திலே நூற்றிற்கு 81 மட்டத்தில் காணப்பட்ட போதிலும், இந்த வருடத்திலே முறையே நூற்றிற்கு 58 மற்றும் நூற்றிற்கு 57 வரை கீழிறங்கியிருந்தது. | இடம்பெற்றிருந்த தொற்று நிலைமையின் கீழ் இந்த மாகாணங்களிலே நடமாட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தலுக்கு கீழ்ப்படிதல், பொலிஸ் உத்தியோகத்தர்களை தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கோடு தேர்தல்கள் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டதனால் பொலிஸ் அறிக்கையை பெற்றுக் கொள்ளுதல் | ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை மேற்கொள் வதற்கான முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தாமதமடைதல் ஆகிய காரணங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்த போதும், 2021.02.28 ஆந் திகதியாகும் போது மத்திய மாகாணத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த 183 முறைப்பாடுகளில் 141ஐ விசாரணைக்குட்படுத்தி நிறைவு செய்திருந்ததுடன் அது நூற்றிற்கு 77 சதவீதமாகும். சப்ரகமுவ மாகாணத்திற்குரிய 145 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதில் 98 க்கு விசாரணை நடவடிக்கைகள்நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் விசாரணைகள் நிறைவு செய்யப்படும் சதவீதம் நூற்றிற்கு 67 ஆகும். | |

## 3. நல்லாளுகை

### 3.1 பொதுமக்களுக்கு சேவைகளையாற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்படும் போது உரிய பொலிஸ் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை | சென்ற ஆண்டு கூடுதலாக விசாரணை நடவடிக்கைகள் பொலிசால் வரவழைக்கப்பட்டு அறிக்கைப் பெறுதலை அடிப்படையாகக் கொண்டு | பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தும் போது பொலிஸ் அதிகாரிகள் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளுதல் அல்லது உரிய பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வதிலும் பார்க்க பொலிசால் வரவழைக்கப்பட்டு அறிக்கைப் பெறுதலை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இடம்பெற்றாலும் மேலே 2.2 இல்குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாகவே தான் என்பதனை மேலும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். | ஆணைக் குழுவிற்கு வரவழைக்கப் பட்டு விசாரணைக்குட் படுத்துதல் அல்லது பொலிஸ் நிலையங்களுக்கு சென்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை வினைத்திறனாக விசாரணைக்குட்படுத்து வதற்காக போதுமான அளவு இடவசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாதிருத்தல் இடையூறாகக் காணப்பட்டது. | மாகாண அலுவலகத்தின் போதுமான அலுவலக வசதிக்காக அந்தப் பிரதேசங்களின் அரச கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கின்றது. இருப்பினும், அந்தப் பிரதேசங்களிலுள்ள தனிப்பட்ட கட்டிடங்களை பெற்றுக் கொள்ள முடியுமா என்பதனை மற்றும் அவ்வாறான கட்டிடங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு மாகாண அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு காணப்படுகின்ற நிலைமையின் கீழ் முடியாதுள்ளதுடன் | மாகாண அலுவல கங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப் பாடுகளை முறையான வேலைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

எதிர்காலத்தில் ஏதாவதொரு வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்த முடியுமா என்பதனைப் தேடிப்பார்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவிற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்றினை நிறுவியிராததுடன் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை உருவாக்குவதற்காக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியுமான வகையில் இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவருக்கான பதவியொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அங்கீகரக்கப்பட்ட பதவியணியினரில் நூற்றிற்கு 25 வெற்றிடங்கள் நிலவுவதனால் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கொண்டு நடாத்திச் செல்வதற்கு தடை ஏற்பட்டுள்ளது. | ஒரு சில பதவிகளின் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பது அதிகாரிகளினால் பெற்றுத் தராததன் காரணமாகவும், அரசியலமைப்பின் 20 ஆவது சீர்திருத்தத்தின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவின் வேலைகள் வரையறுக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நிறைவடைதல் மற்றும் நிலையான சேவையில் இருந்த உத்தியோகத்தர்கள் வேறு சேவைகளுக்கு மாற்றல் பெற்றுச் செல்லல் போன்ற காரணங்களினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நூற்றிற்கு 25 வெற்றிடங்கள் நிலவுகின்றன. | வேலைகளுக்கு பொருந்துகின்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேல் மாகாணம் நீங்கலாக ஏனைய 08 மாகாணங்களில் 16 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுவதுடன், மாகாண பணிப்பாளர்கள் (ஒப்பந்த) 08 பேருக்கு மேலதிகமாக 05 புலனாய்வு உத்தியோகத்தர்கள், 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ உதவியாளர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்டுபடுத்துவதற்காக அனுபவம் வாய்ந்த விசாரணை குழுவொன்று அந்த அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அனைத்து மாகாண அலுவலகங்களுக்கும் மாகாண பணிப்பாளர் ஒருவர் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் மேலுமொரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | மாகாண அலுவலகத்திற்கு அத்தியவசியமாக தேவைகள் காணப்படுமானால் புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு 02 இன் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான மனிதவள திட்டமொன்றை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | அரச நிர்வாக சுற்று நிருப 02/2018 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |